SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# FIRST YEAR EXAMINATION IN ARTS (EXTERNAL) – 2011/2012

HELD IN APRIL/MAY, 2013

## ECS 1.21 பேரினப் பொருளியலுக்கு அறிமுகம்

நேரம்: **03 மணித்தியாலயம்**

எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

---

1. அ. பேரினப் பொருளியல், நுண்பாகப் பொருளியல் என்ற எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.

(10 புள்ளிகள்)

ஆ. பேரினப் பொருளியலின் முக்கிய கூறுகளை இனங்கண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

2. வருமான சுற்றோட்டம் என்றால் என்ன என்பனை விளக்கி, ஒரு திறந்த பொருளாதாரத்திற்கான வருமான சுற்றோட்ட மாதிரியை வரைந்து அதன் பல்வேறு பாய்ச்சல்களையும் விபரிக்குக.

(20 புள்ளிகள்)

3. அ. உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் என்ற எண்ணக்கருக்களை விளக்குக.

(07 புள்ளிகள்)

ஆ. சமநிலைத் தேசிய வருமானத்தை நிர்ணயிப்பதில் இவ்வெண்ணக்கருக்களின் பங்கினை உதாரணங்களைப் பயன்படுத்தி விபரிக்குக.

(07 புள்ளிகள்)

இ. தேசிய வருமானக் கணிப்பீட்டில் இரட்டைக் கணிப்பீடு என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது?

(06 புள்ளிகள்)

4. அரச தலையீடுள்ள ஒரு திறந்த பொருளாதாரத்தின் தேசிய வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு தரப்படுகின்றன.

| | |
|---|---|
| நுகர்வு (C) | $= 200 + 0.8\ Y^d$ |
| முதலீடு | = 50 மில்லியன் ரூபா |
| அரச செலவீடு | = 100 மில்லியன் ரூபா |
| வரிகள் | = 200 மில்லியன் ரூபா |

ஏற்றுமதி = 100 மில்லியன் ரூபா

இறக்குமதி = 120 மில்லியன் ரூபா

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை கணிப்பீடு செய்க.

அ. சம நிலை தேசிய வருமான மட்டம் (3 புள்ளிகள்)

ஆ. சம நிலை தேசிய வருமானத்தில் நுகர்வு மட்டம் (2 புள்ளிகள்)

இ. சம நிலை தேசிய வருமானத்தில் சேமிப்பு மட்டம் (2 புள்ளிகள்)

ஈ. அரச செலவீடுகள் மேலும் 100 மில்லியனால் அதிகரித்தால் தேசிய வருமானம் எவ்வாறு மாற்றடையும் (3 புள்ளிகள்)

உ. இப் பொருளாதாரத்தில் முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி (2 புள்ளிகள்)

ஊ. இப் பொருளாதாரத்தின் நிலை தொழில் மட்டம் 2000 மில்லியன் ரூபா எனில், இதனை அடைவதற்கு நீர் கூறும் ஆலோசனை யாது? (4 புள்ளிகள்)

ஒ. மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி இப்பொருளாதாரத்திற்கு பொருத்தமான வரைபடத்தை வரைக. (4 புள்ளிகள்)

5. அ. பேரினப் பொருளியல் இலக்குகளை அடையாளப்படுத்தி, அவற்றை சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ. சில பேரினப் பொருளியல் இலக்குகள் எவ்வாறு தமக்கிடையே முரண்படுகின்றன என்பதனை எடுத்துக் காட்டுக.

(08 புள்ளிகள்)

6. அ. சென்மதி நிலுவைப் பிரச்சினை என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது?

(05 புள்ளிகள்)

ஆ. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீர் கூறும் ஆலோசனைகள் யாவை?

(15 புள்ளிகள்)

7. அ. வணிக வங்கிகள் எவ்வாறு பணவாக்கம் செய்கின்றன என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. மத்திய வங்கியின் கடன் கட்டுப்பாட்டு முறைகளை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ. கேள்வித் தூண்டல் பணவீக்கம் (05 புள்ளிகள்)

ஆ. பிலிப் வளையி (05 புள்ளிகள்)

இ. உலக வங்கி (05 புள்ளிகள்)

ஈ. வீக்க இடைவெளி (05 புள்ளிகள்)